ஊடக அறிவித்தல் இல. 09

# தேர்தல் ஆணைக்குழு

## பாராளுமன்றத் தேர்தல் - 2020.04.25

**அஞ்சல் மூலம் வாக்களிக்கும் வசதிகள்**

**அஞ்சல் வாக்காளர்கள் மற்றும் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் கவனத்திற்காக**

2020.04.25 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளவர்களின் விண்ணப்பங்களைப் கையேற்கும் கால எல்லை, 2020 மார்ச் மாதம் 16ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்கு முடியவடைகின்றதென்பதை தேர்தல் ஆணைக்குழு சார்பாக அறிவிக்கின்றேன்.

02. அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி எக்காரணத்தினாலும் நீடிக்கப்பட மாட்டாதென்பதால், அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பிக்கத் தகுதிபெற்றுள்ள வாக்காளர்கள் உடனடியாக தனது விண்ணப்பங்களை உரிய முறையில் பூரணப்படுத்தி சம்பந்தப்பட்ட அத்தாட்சிப்படுத்தும் அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் குறித்த விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றவுடன் அவற்றை அத்தாட்சிப்படுத்தி உரிய தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு **2020 மார்ச் மாதம் 16 ஆந் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர்** அனுப்புவதற்கு அனைத்து அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் இத்தால் அறியத் தரப்படுகிறது.

03. எக்காரணத்தினாலும் 2020 மார்ச் மாதம் 16 ஆம் திகதிக்குப் பின்னர் குறித்த தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு நேரிலோ அல்லது அஞ்சல் மூலமோ கிடைக்கப்பெறும் அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான வாய்ப்பில்லை என்பதும் குறித்த விண்ணப்பங்களை தாமதமாகக் கிடைத்த விண்ணப்பங்களாகக் கருதி நிராகரிக்க வேண்டி ஏற்படுமென்பதும் மேலும் அறிவிக்கப்படுகிறது.

மஹிந்த தேசப்பிரிய
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு

தேர்தல் ஆணைக்குழு
சரண மாவத்தை
இராஜகிரிய

2020.03.10

D: Parliamentary Election 2020/Media Release 09/R&P/Rifa